## கோலோனோஸ்கோப்பிக்கு தயாராகுதல்

ஆஸ்பிரின் (**ASA 81mg, Entrophen, ASA**) மற்றும் இரும்பு மாத்திரைகளை சிகிச்சை நடைமுறைக்கு ஒருவாரத்திற்கு முன்பே நிறுத்திவிடவும்.

சிகிச்சை நடைமுறைக்கு 5 நாட்களுக்கு முன் கவுமோடினை நிறுத்தவும்.

டைக்ளோபைடின் (டைக்ளிட்), கிளோப்பிடோக்ரெல் (பிளாவிக்ஸ்), அக்ரனாக்ஸ் ஆகியவற்றை சிகிச்சை நடைமுறைக்கு 3 நாட்களுக்கு முன்பாக நிறுத்தவும்.

**உங்களுடன் வேறுயாராவது <u>கண்டிப்பாக</u> வரவேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். சிகிச்சை நடைமுறைக்குப்பின் உங்களை வீட்டிற்கு அவர் அழைத்துச் செல்ல அவர் வாகனத்தை ஓட்ட வேண்டும், அல்லது உங்களுடன் டாக்சியில் வரவேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும். அவ்வாறு யாரும் வராவிட்டால் உங்களுக்கான சிகிச்சை நடைமுறை ரத்து செய்யப்படும்.**

**அவர்கள் உங்களை அழைத்துச்செல்ல கிளினிக்கிற்கு கண்டிப்பாக வரவேண்டும்.**

### சிகிச்சை நடைமுறைக்கு 3 நாட்களுக்கு முன்

**கொட்டை** மற்றும் **விதைகள்** கொண்ட உணவுகளை உட்கொள்வதை **நிறுத்தவும்.** ஏனெனில் அவை பரிசோதனை நோக்கியை சேதப்படுத்தும்.

**எங்களது அலுவலகத்தை 416-321-3883 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு நீங்கள் வருகை புரியும் நேரத்தை உறுதி செய்யவும்.**

**சிகிச்சை நடைமுறைக்கு முன் தினம்**

<u>அனைத்து நோயாளிகளுக்கும்</u>

உங்கள் பரிசோதனைக் **<u>முன் தினம்</u> எந்த** விதமான திட உணவையும் **<u>உட்கொள்ளாதீர்கள்</u>. <u>தெளிவான திரவ உணவை மட்டுமே உட்கொள்ளவும்.</u> பரிசோதனைக்கு தயாராகும் நாளில் ஒரு மணி நேரத்திற்கு ஒரு கிளாஸ் தெளிவான திரவ உணவையாவது பருகவும்..** தெளிவான திரவ உணவில் தண்ணீர், கிரீம் அல்லது பழம் இல்லாத ஜெல்லோ, ஆப்பிள் ஜூஸ், வெள்ளை திராட்சை ஜூஸ், ஒயிட் கேன்பெரி ஜூஸ், கேட்டோரேடு® அல்லது பவரேடு®, கேஸ்டிரோலைட்®, சோடா, தெளிவான சூப், தேனீர் மற்றும் காபி.சீனி எடுத்துக்கொள்ளலாம், ஆனால் **<u>கிரீம் அல்லது பால் கூடாது.</u>) <u>சிவப்பு அல்லது ஊதா நிற பானங்கள் கூடாது.</u>**

<u>நீரிழிவு நோயாளிகளுக்கு சிறப்பு அறிவுரை</u>

**குடலை தயார் செய்யும் <u>நாளன்று</u>** : வழக்கமான வாய் வழி எடுக்கும் **<u>ஹைப்போகிளைசெமிக்</u>** மருந்தின் வழக்கமான அளவில் **<u>பாதி (1/2)</u>** அளவை மட்டும் எடுத்துக் கொள்ளவும்.

நீங்கள் இன்சுலின் பயன்படுத்தினால், வழக்கமான அளவு **<u>இன்சுலினை</u>**விட **<u>பாதி அளவு (1/2)</u>** இன்சுலின் மட்டுமே எடுத்துக்கொள்ளவும்.

**சிகிச்சை நடைமுறையின் போது உங்களது காலை வேளை நீரிழிவு மருந்தினை கோலோனோஸ்கோப்பி முடிவடையும் வரை எடுக்க வேண்டாம்.**

**பைக்கோ சேலக்சை(PICO-SALAX) நீங்கள் எப்போது எடுத்துக்கொள்ளவேண்டும்**



## குடலை தயார் செய்தல்?

*<u>கவனிக்கவும் : இது மிகவும் வேகமாக வேலை செய்யத் தொடங்ககூடும். எனவே நீங்கள் எளிதில் கழிவறைக்குச் செல்ல வசதியாக இருப்பதை உறுதி செய்து கொள்ளவும். சில மணிநேரங்களுக்கு உங்களுக்கு குடல் தளர்வு அசைவுகளால் வயிற்றுக்கழிவு ஏற்படக்கூடும்</u>*

<u>12 மணி நண்பகல் அல்லது அதற்கு முன்பு சந்திப்பு நேரம் வழங்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு</u>

1வது பாக்கெட் பரிசோதனைக்கு முன்தினம் மாலை 5 மணி

2வது பாக்கெட் பரிசோதனைக்கு முன்தினம் இரவு 9 மணி

<u>நண்பகல் 12.30 மணி அல்லது அதற்கு மேல் சந்திப்பு நேரம் வழங்கப்பட்ட நோயாளிகளுக்கு</u>

1வது பாக்கெட் பரிசோதனைக்கு முன்தினம் இரவு 8 மணி

2வது பாக்கெட் பரிசோதனை தினம் அன்று காலை 6 மணி

<u>பைக்கோ சேலக்ஸ்® எப்படி கலப்பது</u>

பாக்கெட் முழுவதையும் குவளை அல்லது காபி கப்பில், 150மிலி குளிர்ந்த நீரை சேர்க்கவும்.

தொடர்ந்து 2 முதல் 3 நிமிடங்கள் அல்லது லேக்சேட்டிவ் நன்றாகக் கரையும் வரை கரைக்கவும். இந்த கலவை சூடானால், அதனை குளிர விட்டு பின்னர் பருகவும். அது குளிரும் பொழுது தொடர்ந்து கரைக்கவும்.

**ஒவ்வொரு பாக்கெட்டையும் பருகிய பின்னர் 3 மணிநேரத்தில் 4 முதல் 6 பெரிய கிளாஸ் தண்ணீர் அல்லது தெளிவான பானம் (250mL / 8 oz.)** பருகவும்.

**மருந்து வேலை செய்யும் போது மற்றும் உங்களுக்கு குடல் தளர்வு அசைவுகள் இருந்தால் நீர்வற்றிப்போகாமல் தடுக்க ஒவ்வொரு மணிநேரமும் 1 கிளாஸ் தெளிவான பானம் தொடர்ந்து பருகவும்.**

**தெளிவான திரவமாக மலம் கழியும் போது உங்கள் குடல் சுத்தம் செய்யப்பட்டு விட்டது என்று பொருள்.**

பரிசோதனையின் 3 மணிநேரத்திற்கு முன்னால் வாய் வழியாக எதையும் எடுக்காதீர்கள் *<u>உங்களால் தயாரித்த முழு தயாரிப்பையும் எடுக்க முடியாவிட்டாலோஅல்லது உங்கள் குடல் சுத்தம் ஆகா விட்டாலோ நீங்கள் மருத்துவமனைக்கு வருகை புரிந்ததும் தெரிவிக்கவும்.</u>*

உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால், ஜிடி.ஏ. எண்டோஸ்கோப்பி சர்வீசஸ் கிளினிக்கை 416-321-3883 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு அல்லது குடும்ப மருத்துவரை அணுகி கேட்கவும்.

ஜிடி.ஏ. எண்டோஸ்கோப்பி 305 மில்னர் அவென்யூவில், சூட் 920ல் அமைந்துள்ளது. மார்க்கம் சாலை மற்றும் மில்னர் அவென்யூ முனையில் நாங்கள் அமைந்துள்ளோம்.

**மருத்துவக் காரணங்கள் அல்லாமல் சிகிச்சை நடைமுறைக்கு 3 வர்த்தக நாட்களுக்குக் குறைவாக நீங்கள் பரிசோதனையை ரத்து செய்தால் ரத்து கட்டணமாக $100 கட்டணம் வசூலிக்கப்படும் என்பதை கவனிக்கவும்.**